**அறநாயக பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அறநாயக பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் அறநாயக பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பண்டக கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 9,660,483 ஆன போதும் கணக்கீட்டு பெறுமதி ரூபா 3,466,135 ஆனதில் ரூபா 6,194,348 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பண்டக கணிப்பீட்டு அறிக்கை பரிந்துரை பிரகாரம் சொத்துக்கள் கணிப்பீட்டு சபையை நியமித்து முன் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | டிரம்டிரக் வண்டியின், பெறுமதி ரூபா 8,500,000 என இனங்கண்டிருந்த போதும், ரூபா 6,009,602 ஆக கணக்கீடு செய்திருந்ததால் ரூபா 2,490,398 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வித்தியாசத்தை கண்டறிந்து சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிலையான வைப்பு கால நிறைவின் போது கிடைத்திருந்த ரூபா 1,312,013 ஆன வட்டி மீள் முதலீடு செய்யப்பட்ட போதும் கணக்கீடு செய்கையில் முதலீட்டு தொகையுடன் சேர்ப்பதற்கு பதிலாக கிடைக்க வேண்டிய வட்டியாக கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. | புதுப்பிக்கும் கட்டளை கிடைக்கப் பெறாததன் மீது இவ்வாறு செய்வதாகவும், புதிய உரிமை சான்றிதழ் கிடைத்த பின்னர் முதலீடாக குறிப்பிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | முதலீடு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2019 ஆண்டிற்குரிய ரூபா 3,527,984 ஆன கிடைக்க வேண்டிய முத்திரை கட்டண மீதியொன்று மற்றும் 03 மாத முத்திரை கட்டண அட்டவணை இன்னும் கிடைக்க வேண்டி இருக்கையில் 2019 ஆண்டு முத்திரைக் கட்டண மிகை ஒதுக்கீடாக ரூபா 10,217,620 ஆன தொகை திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது. | குறித்த விடய பொறுப்பு உத்தியோகத்தர் வழங்கிய தகவலகளின் படி கண்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், 2021 ஆண்டு குறித்த தகவல்களை சரியான முறையில் பெற்று கணக்குகளை தயாரிப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | மிகை ஒதுக்கீட்டை பதிவழிக்க முன்னர் கிடைக்க வேண்டிய சரியான முத்திரை கட்டண பெறுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (உ) | 2011 ஆண்டு பொருளாதார அமைச்சினால் அன்பளிப்பாக வளங்கிய 424 கொடிக் கம்பங்களின் பெறுமதி ரூபா 469,928 ஆக தளபாடங்கள் மற்றம் பொருத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருந்த போதும் பௌதீக மீதியின் பெறுமதி ரூபா 346,446 ஆனதில் ரூபா 123,482 கூடுதலாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கடிதத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் பெறுமதியை கணக்கீடு செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டு குறைபாட்டு தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் சீசீடிவீ கெமெரா பொருத்தும் செலவு ரூபா 20,000 குறைத்து காட்டியதால் இயந்திர உபகரணங்கள் கணக்கு மற்றும் மூலதன கணக்கிற்கு வருமானத்திலிருந்து பங்களிக்கும் கணக்கு அப்பெறுமானத்தால் குறைத்து காட்டப்படடுள்ளது. | 2021 ஆண்டு கணக்குகள் தயாரிக்கையில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்கை சரிசெய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 09 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்று பிரகார பெறுமதி ரூபா 150,696,634 மற்றும் அட்டவணை பிரகார மீதி ரூபா 157,832,514 ஆனதில் ரூபா 9,702,262 ஆன வித்தியாசமானது. | ஊழியர் கடன், முற்பணம் மற்றும் நூலக புத்தகங்கள் ஆகிய விடயங்களின் வித்தியாசத்தை காண்பது கடினமென மற்றும் அனைத்து மீதிகள் தொடர்பாக தொடர்ந்தும் கண்டறிந்து எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறவிக்கப்பட்டிருந்தது. | வித்தியாசத்தை இனங்கண்டு மீதிகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 தொங்கள் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 2001 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் ரூபா 631,350 ஆன தொங்கல் கணக்கு மீதிக்கு உரிய செம்மையாக்கல் செய்யாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்குரிய ஆவணங்கள் சபையிடம் இல்லாததால் அதனை எதிர்காலத்தில் பதிவழிக்க நடவக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தேவையான தகவல்களை கண்டறிந்து சரிசெய்து கொள்ள அல்லது ஒழுங்கான முறைமையொன்றின் மூலம் பதிவழிக்க வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமானக் கோவை நிதிப் பிரமாணம் 571 (3) | 02 ஆண்டுகளை கடந்த ரூபா 111,707 பெறுமதியான வேலை வைப்பொன்று மற்றும் 13 கலப்பு வைப்புகளை தீர்த்திருக்கவில்லை. | இது தொடர்பில் விடய அலுவலர் அறிவூட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 12,458,915 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 11,815,737 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) வீதவரி மற்றும் குத்தகை | | |
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வீதவரி குத்தகை மீதி ரூபா 226,711 ஆனது. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வீதவரியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) வாடகை

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் வீட்டு வாடகை நிலுவை ரூபா 109,015 ஆனது. | விடய அலுவலரின் தவறினால் கூடுதல் தொகை ஆவணப்படுத்தப்பட்டுள்ளதால் அவற்றை பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிடக் கூடிய தொகையொன்று இல்லை என்பதை உறுதி செய்து பதிவழிக்க முறையான வழிமுறையை பின்பற்ற வேண்டும். |

(இ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2020 திசெம்பர் 31 திகதி 05 ஆண்டுகளை விஞ்சி கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண மீதி ரூபா 50,000 மற்றும் முத்திரைக் கட்டணம் மீதி ரூபா 543,835 ஆனது. | 05 ஆண்டுகளை விஞ்சிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | காலம் கடந்த நிலுவைகளை தாமதமின்றி அறவிட வேண்டும். |

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

**சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கழிவுப் பொருட்களை வெளியிட சபைக்கு சொந்தமாக பொருத்தமான காணியொன்று இல்லாததால் அதற்காக தனியார் காணியொன்றை பெற்று 2020 ஆண்டிற்காக ரூபா 840,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. சபை அதிகார எல்லையில் ஒரு தினத்திற்கு ஒன்றுசேரும் 01 – 1.5 டொன் இடையிலான அளவு இக் காணியில் குழிகள் வெட்டி வெளியிடல் மாத்திரம் செய்யப்படுவதுடன் பொருத்தமான காணியொன்றை தெரிந்து கழிவுப் பொருட்களால் இயற்கை பசளை தயாரிக்கயேனும் வேலைத் திட்டமொன்று செயற்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட காணியில் கழிவுப் பொருள் முகாமைத்துவ கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது எனவும், களுகல கிராம அலுவலர் பிரிவில் தெபத்கம வத்த காணியை சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கழிவுகளை வெளியிடுவது தொடர்பில் நிலையான தீர்விற்கு வரவேண்டும். |